2014 ஜூலை 15]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டத்தில் மொத்தமுள்ள 51 விடுதிகளுக்கும் சொந்தக் கட்டடம் கட்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இவற்றில் 34 விடுதிகள் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. மேலும், 16 விடுதிகளுக்குச் சொந்தக் கட்டடம் கட்டும் பணிகள் பொதுப் பணித் துறை மூலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மீதமுள்ள ஒரு விடுதிக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு 2014-2015 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 149, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

149—

ஆரம்ப சுகாதார நிலையம்

***6804—திரு. இரா. குமரகுரு:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உளுந்தூர்பேட்டை தொகுதி, ஆசனூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை ஊராட்சி ஒன்றியம், ஆசனூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் ஆணை பிறப்பிக்கப்பட்டு, மேற்படி புதிய ஆரம்ப சுகாதார நிலையம் 21-2-2014 அன்று மாண்புமிகு முதலமைச்சர்

அவர்களால் திறந்து வைக்கப்பட்டு, தற்போது 65 முதல் 75 புற நோயாளிகள் தினமும் பயன்பெறுகின்ற வகையில் அந்த ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாமன்ற உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்கள்.

திரு. இரா. குமரகுரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோடி ஆண்டுகள் தவமிருந்து தமிழக மக்கள் கண்டெடுத்த எங்கள் தவமே! இருண்டு கிடந்த தமிழகத்தை மீட்டெடுத்த எங்களின் ஒளி விளக்கே! காவேரிக்கு உயிர் கொடுத்த கலங்கரை விளக்கமே! ஏழை மக்களுக்கு அம்மா உணவகம் கொடுத்த தமிழர்களின் கருணைக் கடலே! (மேசையைத் தட்டும் ஒலி) தனி நபராக நின்று, குள்ளநரிக் கூட்டத்தைச் சிதறடித்த சிங்க நிகர் தலைவியே! கச்சத் தீவை மீட்டெடுக்கப் போகும் வீரத் தாயே! முல்லைக்கே தேர் ஈன்றான் பாரி; முல்லைக்கு உயிர் ஈன்ற எங்கள் தாயே! சீரோடு பாராளும் செந்தமிழே! மருத்துவத்திற்கு ஒரு மகுடமாய், மாணிக்கமாய், சாமானிய மக்களுக்கு நாடி பார்த்து, நோய் தீர்க்க, பல ஆட்சியாளர்கள், பல ஆண்டுகள் செய்யாததை, மாண்புமிகு அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற மூன்றாண்டுகளில், உளுந்தூர்பேட்டை தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, ஆசனூர், சேந்தநாடு, எறையூர், காட்டுஎடையார், செங்குறிச்சி ஆகிய 5 கிராமங்களில் 5 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களை மாண்புமிகு அம்மா அவர்கள் தன்னுடைய திருக்கரங்களால் காணொளிக் காட்சி மூலமாகத் தொடங்கி வைத்ததோடு மட்டுமல்லாமல், அந்த 5 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டடம் கட்டுவதற்கு நிதியும் ஒதுக்கிய எங்கள் கருணைத் தெய்வமே! மாண்புமிகு மனிதப் புனிதவதியே! எங்கள் குல தெய்வமே! மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களுக்கு என் சார்பாகவும், எனது தொகுதி மக்களின் சார்பாகவும் கோடானுகோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உளுந்தூர்பேட்டை அரசு பொது மருத்துவமனையானது, NH-45, NH-68 ஆகிய இரண்டு தேசிய நெடுஞ்சாலைகளுக்கு மத்தியில் உள்ளது. அந்த தேசிய

2014 ஜூலை 15]

நெடுஞ்சாலைகளில் சாலை விபத்துகள் அதிக அளவில் ஏற்படும்போது, விபத்தில் பாதிக்கப்பட்டவர்களைச் சிகிச்சைக்காக உளுந்தூர்பேட்டை அரசு பொது மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும்போது, அங்கு அவர்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்குப் போதிய வசதி இல்லாத காரணத்தினால், மேல் சிகிச்சைக்காக விழுப்புரம் அல்லது பாண்டிச்சேரிக்கு அவர்களைக் கொண்டு செல்ல வேண்டியிருக்கிறது. அப்படிக் கொண்டு செல்லும்போது, பல உயிர்ச் சேதங்கள் ஏற்படுகின்றன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், உளுந்தூர்பேட்டையில் வசிக்கும் பொது மக்களின் நீண்டநாள் கோரிக்கையான உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனையில் அதிநவீன விபத்து சிகிச்சைப் பிரிவு ஒன்றினை அமைத்துத் தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய உளுந்தூர்பேட்டை தொகுதியிலே இருக்கின்ற கிளியூர் ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சுற்றிலும் சுமார் 40 கிராமங்கள் இருக்கின்றன. அந்தக் கிராமங்களிலிருந்து தினசரி 250-க்கும் மேற்பட்ட புறநோயாளிகள் வந்து செல்கின்றனர். அதுமட்டுமல்லாமல், அந்தப் பகுதியைச் சுற்றியுள்ள தாய்மார்கள் அங்கே பிரசவத்திற்கு வரும்போது, அங்கே தங்கி சிகிச்சை பெறுவதற்குப் போதுமான இட வசதி இல்லாத காரணத்தினால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரமுயர்த்திக் கொடுக்குமாறு மீண்டும் பணிவோடு கேட்டுக்கொண்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனை 92 படுக்கை வசதி கொண்ட ஒரு தாலுகா மருத்துவமனை. அந்தப் பகுதியில் விபத்துகள் அதிகமாக நடைபெறுகின்ற காரணத்தினாலே, மேற்படி மருத்துவமனையில் உயர்தர சிகிச்சை அளிக்கப்பட வேண்டிய வசதிகள் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கோருகின்றார்கள். ஏற்கெனவே அங்கு A.E. Ward — Accident Emergency Ward 14 படுக்கைகளோடு நல்லமுறையிலே செயல்பட்டு வருகின்றது. ஒரு Emergency O.T. - அவசர அறுவை சிகிச்சை அரங்கமும்

அங்கே இருக்கின்றது. அங்கு விபத்துகளால் பாதிக்கப்பட்டு மாதத்திற்கு சுமார் 120 R.T.A. (Road Traffic Accident) நோயாளிகள் வருகை புரிந்து கொண்டிருக்கின்றார்கள். ஆகையினாலே, அங்கே இப்போது கூடுதலாக சிகிச்சை வசதிகள் தேவைப்படின், ஆய்வு செய்து, மேற்படி அந்த மருத்துவமனையை இன்னும் தரமுயர்த்துவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, கிளியூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரமுயர்த்த வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கோரியிருக்கின்றார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் முதன்முதலாக 2001-லே இதுபோன்ற அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரமுயர்த்த வேண்டுமென்ற கொள்கை முடிவை உருவாக்கி, செயல் திட்டத்தை உருவாக்கி, (மேசையைத் தட்டும் ஒலி) இன்றுவரையில் தொடர்ந்து 385 ஒன்றியங்களிலே, 368 ஒன்றியங்களில் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரமுயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகின்றன. அந்த அடிப்படையிலே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, இந்த ஆண்டு மீதமுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தரமுயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்கள்.

திரு. இரா. குமரகுரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உளுந்தூர்பேட்டை அரசு பொது மருத்துவமனையில் அதிநவீன விபத்துப் பிரிவிலே ஒரு நரம்பியல் மருத்துவரும், ஒரு Ortho Doctor-ம் அவசியமாகத் தேவைப்படுகிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்கண்ட மருத்துவமனைக்கு அந்த இரண்டு பிரிவுகளுக்கும் மருத்துவர்களை நியமனம் செய்து

2014 ஜூலை 15]

தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், கொள்கையளவில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 30 படுக்கைகள் கொண்ட தரம் உயர்த்தப்பட்ட மருத்துவமனை அமைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், கிளியூர் ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சுற்றியுள்ள 40 கிராமங்களில் உள்ள மக்களும் அதிகமாக இந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்குத்தான் வந்து சிகிச்சை பெற்றுச் செல்கிறார்கள். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காகச் செல்ல வேண்டுமென்றால் உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனைக்குத்தான் செல்ல வேண்டும். அந்த மருத்துவமனை 25 கி.மீ. தொலைவில் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இதைச் சிறப்பு நிகழ்வாக எடுத்துக்கொண்டு கிளியூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்திக் கொடுக்க ஆவன செய்ய வேண்டும் என்று மீண்டும், மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டு, அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிடுகின்ற விழுப்புரம் பகுதியில் 11 ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன. மேற்படி 11 ஊராட்சி ஒன்றியங்களிலே, ஒரு அரசு ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட்டிருக்கிறது. இப்பொழுது உறுப்பினர் குறிப்பிடுகின்ற கிளியூர் பகுதியிலுள்ள நோயாளிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் துறை ரீதியாக உரிய ஆய்வுகள் நடத்தி, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]